# மக்கள் சொத்து

# நிழலுருவக் காட்சிகள் - 4

## (கதைச் சுருக்கம்)

### 1

ஒருவன் நடந்து போகிறான்.

ஒரு குரல் : இவன் யார்?

பதில் குரல் : இவன் ஓர் ஏழையாயிருக்கலாம்

### 2

ஒரு முகமூடி குதிரையை விட்டிறங்கி ஒரு குகையில் நுழைகிறான்

ஒரு குரல் : இவன் யார்?

பதில் குரல் : இவன் மக்கட்குத் தொல்லை விளைப்பவனாகவும் இருக்கலாம்; அல்லது மக்களுக்குத் தொண்டு செய்பவனாகவும் இருக்கலாம்.

### 3

செல்வந்தன் ஒருவன் ஆடம்பரமான கூடத்தில் அமைந்த புத்தர் சிலைக்கு வணக்கம் செய்து, புத்தகங்களில் ஒன்றை விரித்துப் படித்தபடி நாற்காலியில் அமர்கின்றான்.

ஒரு குரல் : இவன் யார்?

பதில் குரல் : இப் பணக்காரன், மக்களை ஏய்ப்பவனாகவும் இருக்கலாம்; காப்பவனாகவும் இருக்கலாம்.

### 4

ஒருகுரல் : அதோ அவனைப் போலீசார் விலங்கிட்டு அழைத்துச் செல்லுகின்றார்களே?

**பதில் குரல்** : இவன் ஓர் குற்றவாளியாகவும் இருக்கலாம். குற்றமற்ற வனாயும் இருக்கலாம்.

**மெய்க் காட்சிகள்:** (கோர்ட்)

நீதிபதி இவன் யார் என்று தொடர்ந்து, அவன்மேல் குற்றப் பத்திரம் படிக்கிறான். அதன்பின் சாட்சி விளக்கம் நடக்கிறது. பின் பிராசிகூஷன் தரப்பு வாதம்! குற்றவாளி தரப்பு வக்கீல் நீ யார்? என்று குற்ற வாளியைக் கேட்கிறான். குற்றவாளி நான் யார்? என்று தொடங்கித் தன் வரலாறு கூறுகிறான்.

■ ■ ■

## கதை

## ஏழுமலை முதலியார் இல்லம்!

ஏழுமலை முதலியாரின் மனைவியாகிய காவேரி தன் ஆறாவது பெண்ணான பொன்னம்மாவை அழைத்துத் தலை பின்னி, பாட சாலைக்குப் போ என்று சொல்லுகிறாள். தூணைக் கட்டிக் கொண்டு நிற்கும் பொன்னம்மாவை நோக்கி ஏழுமலை முதலியார்

> **தலைவாரிப் பூச்சூடி உன்னைப் - பாட**
> **சாலைக்குப் போ என்று சொன்னாள் உன் அன்னை**
> **சிலை போல ஏனங்கு நின்றாய் - நீ**
> **சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?**
> **விலைபோட்டு வாங்கவா முடியும் - கல்வி**
> **வேளைதோ றும்கற்று வருவதால் படியும்**
> **மலைவாழை அல்லவோ கல்வி? - அதை**
> **வாயார உண்ணுவாய் போஎன்பு தல்வி**

என்று கூறுகிறார். பொன்னம்மா பாடசாலை செல்லுகின்றாள். மற்றும் மூத்த இரு குழந்தைகளும் செல்லுகிறார்கள்.

வீட்டின் கூடத்தில் மற்றப் பிள்ளைகளும் பெற்றோரும் உட்கார்ந்து பேசியிருக்கிறார்கள்.

மூத்தப் பெண்ணாகிய அன்னம், மாமியார் வீட்டிலிருந்து வந்திருக்கிறாள். அவளை அழைத்துப் போக அவள் கணவனாகிய சுந்தரமூர்த்தி வருவதாகத் தந்தி வருகிறது. ரயிலடிக்கு அன்னத்தின் பெரிய தம்பியாகிய இளஞ்சேரன் காரில் செல்லுகிறான். அவன் போன பின், பெற்றோர் தம் மருமகனைப் பற்றி பேசுகிறார்கள். அதுபற்றி அங் கிருக்கும் அன்னம் உள்ளுக்குள் வருந்துகிறாள். மருமகன் சுந்தர மூர்த்தி மாமனார் வீட்டுச் சொத்தைச் சுரண்டுவதிலேயே கருத்தா யிருப்பவன். அன்ன மும் தன் கணவனைப் பின்பற்றுகின்றவளே!

ரயிலிலிருந்து சுந்தரமூர்த்தி மட்டுமல்ல; அவன் தங்கையான மங்கையர்க்கரசியும் இறங்குகின்றாள். மிக்க மகிழ்ச்சியுடன் இளஞ் சேரன் அவ்விருவரையும் வரவேற்று அழைத்து வருகின்றான்.

வரும்போதே சுந்தரமூர்த்தி தன் மைத்துனன் கையில் கட்டிக் கொண்டிருந்த வயிரச் செயினை வாங்கித் தன்கையில் கட்டிக் கொள்ளுகின்றான்.

வீட்டில் அனைவரும் சுந்தரமூர்த்தியையும், மங்கையர்க் கரசியையும் வரவேற்று, க்ஷேம லாபங்களைப் பேசுகையில் சுந்தரமூர்த்தி, இந்த ஊரில் இப்போது 'தொழிலாளர் கலாட்டா' எப்படி இருக்கிறது என்கிறான். அதற்கு ஏழுமலை முதலியார், தொழிலாளிகள் தம் உழைப்பின் மதிப்புக்குத் தக்க கூலி கேட்கும் ஒரு முயற்சிக்கு, கலாட்டா என்று பெயரா? தொழிலாளர் கிளர்ச்சி என்று சொல் தம்பி என்று கூறியதிலிருந்து பேச்சு முற்றுகிறது. மனத் தாங்கல் உண்டாகின்றது. ஏழுமலை முதலியாரும், அவன் மகன் இளஞ் சேரனும் தொழிலாளர் கட்சி! சுந்தர மூர்த்தி தொழிலாளர் பகைவன்!

ஏழுமலை : ஏன் அப்படி காவேரி?

காவேரி : அவள் அத்தானிடம் உயிரை வைச்சிருக்காள்.

ஏழுமலை : சரி உயிரை வைச்சிருக்கட்டும், வயிரச் சங்கிலியையுமா வைக்கணும்.

காவேரி : நிறுத்துங்கள் (அன்னமும் சுந்தர மூர்த்தியும் மங்கையர்க் கரசியும் நடந்து வருகின்றார்கள்)

சுந்தர : வணக்கம்!

மங்கைய : வணக்கம்! (மங்கையர்க்கரசி, சுற்றுப் புறத்திலே உட்கார்ந் திருக்கும் காவேரி பூங்கோதையுடன் அமர்கின்றாள் இளஞ்சேரனும், அன்னமும் ஏழுமலையுடன் அமர்கின் றார்கள் சுந்தரமூர்த்தி அங்கிட்டு இருக்கும் நாற்காலிக்கு பின்புறம் நாற்காலியைப் பிடித்தபடி நிற்கிறான்)

காவேரி : நலமா மங்கையர்க்கரசி?

மங்கை : நலந்தான் அத்தே?

சுந்தர : இங்கே தொழிலாளர் கலாட்டா இப்ப எப்படியிருக்குது?

ஏழுமலை : தொழிலாளர் கலாட்டா! தொழிலாளிகளில் கூட்டு முயற்சிக்குக் கலாட்டா என்று பெயரா? தொழிலாளர் கிளர்ச்சி என்று சொல்லணும் தம்பி.

**சுந்தர** : நீங்கதான் தொழிலாளர்களைத் தூக்கித் தலையில் வைச் சிருக்றீங்க, கயவாளி பசங்க தலை துள்ளிப் பேறாங் கண்ணா அதுக்குமா உங்க ஆதரவு?

**இளஞ்சேரன்** : கயவாளி பசங்கள்! கருத்து நிறைந்த அன்பின் வலியால், கடுமுழைப்பால், கனவுலகை நனவில் கொண்டு வந்தவர்கள் கயவாளிகளா அத்தான்! காடு களைந்து நாடாக்கியும், கடலில் முத்தெடுத்தும், ஆடை தந்தும், அணி தந்தும், கோடை தவிர்க்கக் குளிர்மரங்கள் நட்டும், பாடையில் ஏறும் மக்கட்குப் பல்லுணவு தந்தும் காடைக் கழுத்துப்போல் கை இழுக்க உழைக்கும் கண்ணொத்த தோழர்கள் கயவாளியா அத்தான்? வெளியிலும் வெடிப்பும் பயிலும் கட்டுதரையை வயலும் வாய்க்காலு மாக்கி என்றும் பெரும்புனலும் தேக்கி, நெல் விளை வித்த நாமும் மக்கள் என்ற சொல்லினைத்... கயவாளியா அத்தான்! அன்றிருந்த அழகற்ற ஆட்சியற்ற அறிவற்ற பெருநிலத்தை இன்றிருக்கும் எழிலுற்ற இனிய வசதி யுள்ள ஆட்சியும் மாட்சியுமுடைய நாடாக்கிய நல் லுழைப்பாளர் கயவாளிகள் என்றால், அந்த நல்லுழைப் பாளர்களைக் குறை கூறும் உம் போன்றோருக்கு என்ன பெயர் அத்தான்? உழைப்பவன் கயவாளியா? உழைக்கா துண்டு கொழுப்பவன் கயவாளியா? இவ்வாறும் உண்டு பல் இளித்து வீறாப்புப் பேசும் பாதகன் கயவாளியா? அன்றும் இன்றும் என்றும் நம்மை ஆதரிக்க உழைக்கும் தொழிலாளி செய்யும் நன்றி மறந்த நயவஞ்சகர்க்குத் தரவேண்டிய கயவாளிப் பட்டத்தை அத்தான் முகவரி தெரியாமல் தூய உழைப்பாளி களிடம் சேர்க்க விடுகிறார். வெளியுலகின் வீண் முயற்சி இன்றும் செல்லாது. அறிவுலகம் ஆத்திரப்பட்டே தீரும்!

**அன்னம்** : போதும் தம்பி! நீ ஏன் ஆத்திரப்படுகிறாய்?

**இளஞ்சேரன்** : அக்கா என் பேச்சு உங்கட்கு ஆத்திர மூட்டு மானால் அதற்காக நான் வருந்துகிறேன்

**(சுந்தரமூர்த்தி நிதானிக்கிறான். குறுநகைப்புக் கொள் கின்றான்)**

சுந்தரமூர்த்தி : உங்களிடம் சிறிது பணம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கின்றது. அது தொழிலாளரை ஆதரிக்கின்றது. அது தான் தலைமேல் தானே மண்ணை வாரிப்போட்டுக் கொள்ளக்கூடாதே என்பது தான் என் கவலை. என்னை மன்னிக்கணும் மாமா. என்னை மன்னிக்கணும் மச்சான்!

(சாப்பாட்டுக்குப்பின் சுந்தரமூர்த்தியும் அன்னமும் ஒருபுறம் பேசுகிறார்கள். அன்னம் தன் தகப்பனிடமிருக்கும் காரைக் கேட்க வேண்டுமாம். அன்றியும் பிறகு கொடுத்து விடுகிறேன் என்று பதினாயிரம் ரூபாயும் கேட்க வேண்டுமாம். அன்னமும் கேட்டு வாங்கித் தருவதாக ஒத்துக் கொள்ளுகிறாள்.

நான் உன் தகப்பனாரிடம் "உங்கள் மகள் பூங்கோதையை எங்கவூர் இரிசப்ப முதலியார் மகன் எட்டியப்பனுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்பேன் அதை நீயும் ஆதரித்துப் பேச வேண்டும்" என்று சுந்தரமூர்த்தி கூற அதற்கும் அன்னம் ஒத்துக் கொள்ளுகின்றாள். (எட்டியப்பன் நோயாளி; படியாதவன்)

வீட்டின் தோட்டத்திலுள்ள திண்ணையில் இளஞ்சேரனும் மங்கையர்க்கரசியும் தங்கள் பழம் பாடல் ஒன்றைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள்.)

பாட்டு

**செந்தமிழே! உயிரே! நறுந்தேனே - என்**
**செயலினை மூச்சினை உனக்களித் தேனே - நீ**
**நைந்தாயெனில் நைந்து போகும்என் ஆவி**
**நன்னிலை உனக்கெனில் எனக்குத் தானே ... ...**

அதன் பிறகு இளஞ்சேரன் எப்போது ஊருக்கு? என்று கேட்க, அவள் இன்று மாலை என்று கூறுகின்றாள். பிரிவுக்கு இருவரும் வருந்துகிறார்கள். ஒன்றை ஒன்று பிரிந்தால் உயிர் மாளும் அன்றில் பறவைகள் அல்லவா - நாம்? என்று கூறிய இளஞ்சேரனுக்கு "நான் உனக்கு! நீ எனக்கு! இந்த உறுதியை நம் உள்ளத்திற்கு ஆறுதல்

ஆக்கிக் கொள்வோம். நம் திருமண நாளை நோக்கித் தவம் கிடப்போம்." என்கிறாள். பிரிந்து வீட்டினுள் போய்விடுகின்றார்கள்.

மற்றொருபுறம் அன்னம் தன் தம்பிமார் தங்கைமார் போட்டிருக்கும் நகைகளை, சாக்குப் போக்குக்கூறி வாங்கித் தன் பெட்டியில் வைத்துக் கொள்ளுகிறாள்.

மேலும் அவர்களின் உதவியைக்கொண்டே வீட்டிலுள்ள வெள்ளிப் பாத்திரங்கள் தட்டுமுட்டுச் சாமான்கள், ஊறுகாய், வற்றல்கள், அரிவாள் மனை, தேங்காய், துவரம் பயறு, உளுந்து முதலிய தானியங்கள் முறுக்கு முதலிய தின்பண்டங்கள், புதுமுறம், துடைப்பக் கட்டு ஆகியவைகளை மூட்டை கட்டுகிறாள்.

இதையெல்லாம் ஏழுமலை முதலியாரும் காவேரியம்மாவும் பார்த்துப் போகிறார்கள். ஏழுமலையின் கிண்டல்! காவேரி யம்மாவின் வெறுப்பும், சிரிப்பும்! உரத்துப் பேச அஞ்சுகின்றனர்! ஊருக்குப் புறப்படும் அன்னம், சுந்தரமூர்த்தி, மங்கையர்க்கரசி மூவரும் ஏழுமலை காவேரி இருவரிடமும் பேசுகிறார்கள்.

சுந்தரமூர்த்தி, தன் மாமனார் எலக்ஷனில் போட்டியிட வேண்டிய அவசியத்தைக் கூறுகிறான். மாமனார் ஒப்புகிறார்.

அன்னம் கார் கேட்கிறாள். பத்தாயிர ரூபாய் கேட்கிறாள். கிடைக்கின்றன.

ஊருக்குப் புறப்படுகிறார்கள்! ஏழுமலை முதலியார் வீட்டுப் பொருள்கள் எல்லாம் மூட்டைகள் வடிவத்தில் வண்டியில் ஏற்றப் படுகின்றன. மகளும் மருமகனும் போய் வருகின்றோம் என்று கூறு கின்றார்கள். காவேரியம்மா சும்மா இருக்கிறாள். அவள் உங்கள் பிரிவுக்கு வருந்துகிறாள். மகிழ்ச்சி நீங்கள் போய் வாருங்கள் என்று ஏழுமலை கூற மூவரும் தெருவிலுள்ள காரை நோக்கிச் செல்லுகின் றார்கள். இளஞ்சேரனும் பின் தொடர்கின்றான். கார் நகருமுன் நான்கு விழிகள் நீர் சொரிகின்றன. மங்கையர்க்கரசி அழுகையை உள்ளடக்கி, நான் போய் வருகின்றேன். அத்தான் என்கிறாள். இளஞ்சேரன் உதடுகள் நடுங்கின. உம் என்று விடை கூறினான். கார் பறந்தது!

இந்த வட்டாரத்தில் ஏழுமலை முதலியார் நல்ல செல்வாக் குள்ளவர். அவரைக் காங்கிரஸில் இழுத்துப் போட்டுக் கொண்டால் காங்கிரஸின் மானம் கப்பலேறாமலிக்கும் என்று காங்கிரஸ் லீடர்கள்

ஏழுமலையை அணுகுகின்றார்கள். ஏழுமலை முதலியார் தீங்கரசு செய்யும் காங்கிரசை நான் ஆதரிக்கமாட்டேன். நான் சுயேச்சையாய் நிற்கப் போகிறேன் என்று கூறி வெருட்டுகிறார்.

பல வட்டாரத்தினர்க்கு ஏழுமலை முதலியார் பணம் கொடுக்கிறார்.

ஓட்டுச் சேகரிக்க ரௌடி ரங்கனின் துணை அவசியம் என்று அவனை அணுகுகின்றார் ஏழுமலை முதலியார். அவன், சர்க்கிள் காங்கிரசுக்கு வேலை செய்யும்படி சொல்லி யிருக்கிறார் என்று கையை விரித்து விடுகிறான். பல கட்சிகளின் எலக்ஷன் பிரசாரக் கூட்டங்கள் கோஷங்கள் போட்டுக் கொண்டு போகின்றன.

1. காங்கிரசுக்கே ஓட்டு போடுங்கள் திட்டமில்லாத - செல்வாக் கில்லாத மற்றக் கட்சிகளைத் திரும்பியும் பாராதீர் (இது கேட்ட மக்கள் முணு முணுக்கிறார்கள்)

2. ஜனநாயகக் கட்சிக்கே ஓட்டுப் போடுங்கள். கண் கலங்க வைக்கும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்கள் (இப்படி ஒரு கட்சியா? ஓகோ)

3. ராஜா எஸ். ராமனாதன் கட்சிக்கே ஓட்டுப் போடுங்க; ஏங்க வைக்கும் காங்கிரஸை எதிர்த்து விரட்டுங்கள் (இப்படி ஒரு கட்சியா? இதுவும் காங்கிரஸை எதிர்க்கிறது)

4. ஜஸ்டிஸ் கட்சிக்கே ஓட்டுப்போடுங்கள். ஆறவுன்ஸை அழித்து ஒழியுங்கள். பிளாக் மார்க்கெட்டைப் பிடர் பிடித்து தள்ளுங்கள். தடியடிக் கட்சி தலை குனியச் செய்யுங்கள் (இது எப்போது கிளம்பிற்று? காங்கிரஸை எதிர்த்தே வேலை செய்கிறது)

5. சுயேச்சைக் கட்சியை ஆதரியுங்கள். காங்கிரஸ் கைதிகள் ஓட்டுக் கேட்டால் அவர்களுக்கு ஜெயிலின் கோட்டைக் காட்டுங்கள். (அப்படிச் சொல்லு! சபாஷ்)

6. திராவிடர் கழகம் அரசியலில் கலந்து கொள்ளாது. காங்கிர ஸுக்கு ஓட்டுப் போடாதீர்கள். (கலந்து கொள்ளாதா? அட!)

7. திராவிடர் முன்னேற்றக் கழகம் அரசியலில் கலந்து கொள்ளாது. காங்கிரஸுக்கு ஓட்டுப் போடாதீர்கள் (சின்ன பெரியாரும் அப்படியா? அட!)

CENTER FOR BHARATHIDASAN STUDIES 00532 LIBRARY BHARATHIDASAN UNIVERSITY

முதலியார் தோல்வியடைகிறார். பெருந்தொகை செலவாகிறது. சொத்தெல்லாம் கடனில் மூழ்கி விடுகின்றது. கடன்காரர் தொல்லை கொடுக்கத் தொடங்கி விடுகின்றார்கள். சொத்தையெல்லாம் விற்றுக் கடன்காரர்களுக்குக் கொடுத்துவிட எண்ணுகிறார் முதலியார். சொத்தின் மேல் இன்னும் சிறிது கடன் வாங்கிப் பூங்கோதையின் திருமணத்தை முடித்து விடலாம் என்று இளஞ்சேரன் சொல்ல, முதலியார் ஒப்புகிறார்.

சுந்தரமூர்த்தியும் அன்னமும் மாப்பிள்ளையை பார்த்துவிட்டு வந்தார்களாம். மாப்பிள்ளை எல்லா வகையிலும் பொருத்தமானவனாம். பெண்ணை மாப்பிள்ளையும், மாப்பிள்ளையைப் பெண்ணும் பார்க்க அனுமதிப்பதில் தமக்கு இஷ்ட மில்லையாம் இவ்வாறு சுந்தரமூர்த்தி யும் - அன்னமும் கூற இளஞ்சேரன் எதிர்க்கிறான். ஆயினும் அக்காவின் சொல்லை அவமதிக்க அவன் எண்ணவில்லை.

ஐயர் திருமண நாள் வைக்கிறார். இளஞ்சேரன் ஆக்ஷேபம் சொல்லவில்லை. தலைக்குயர்ந்த தங்கள் தலைச்சன் மகள் சொல்லைத் தட்டி நடக்கப் பெற்றோரும் பிரியப்படவில்லை.

காலை மூன்று மணிக்குத் திருமணம் நடக்கிறது.

மாப்பிள்ளைக்குச் சிறிது காய்ச்சலாம். அவனை நடத்திக் கொண்டு வருவது போல் நாலுபேர் தூக்கி வந்து மணவறையில் உட்கார வைக்கிறார்கள். மாப்பிள்ளை தாலி கட்டுவது போல் மற்றவர்கள் தாலி கட்டுகிறார்கள்.

பெண் மாப்பிள்ளைக்குப் பாலும் பழமும் கொடுக்கிறார்கள். மணமகன் பிணமகனாகிறான். மணவீடு பிணவீடு! இளஞ் சேரன் கதறல்! வைதீக மணமுறைக்குச் சூடு!

மறுநாள் இளஞ்சேரன் தோட்டத்துத் திண்ணையில் தனியே இருந்து வருந்துகிறான். அவனை வீட்டில் பெற்றோர் தேடுகின்றனர். அன்னம் தோட்டத்தில் தம்பியைக் கண்டு தேறுதல் கூற, அவன், நீங்கள் இருக்கையில் எங்களுக்கு ஏதும் வந்திருக்க ஞாயமில்லை என்கிறான். அதற்கவள் அந்தக் கனவு காண வேண்டாம். இப்போது எனக்குப் பிள்ளையில்லா விட்டாலும் இனிமேல் பத்துப்பிள்ளை பிறக்கும். எங்களிடத்திலிருந்து ஒரு செம்பாலடித்த காசையும் எதிர்

பார்க்க வேண்டாம் என்று வீட்டினுள் நுழைகையில் எதிரில் மங்கையர்க்கரசி வேறு புறமாகத் தன் அத்தானிடம் ஓடிவந்து சில நகைகளை நீட்டி இதைச் செலவுக்காக விற்றுக் கொள்ளுங்கள் என்று கெஞ்ச அவன் மறுக்கிறான்.

ஏழுமலை முதலியாரின் சொத்தெல்லாம் போய்விட்டதால் வீட்டின் அசையும் பொருள் ஜப்தி நடக்கிறது. கொல்லையில் கிடக்கும் அம்மியைக் காரில் போட்டுக்கொண்டு அன்னமும் சுந்தர மூர்த்தியும் பயணப்படுகின்றார்கள். அப்போதும் அக்காளுக்குப் பிரியமான ஆப்பிள் பழக் கூடையை இளஞ் சேரன் காரில் வைத்து கை கூப்பி நிற்கிறான். ஏற இருக்கும் மங்கையர்க்கரசியை நோக்கி ஏறு சீக்கிரம் என்று சுந்தர மூர்த்தி அதட்ட அவளும் காரில் ஏறுகிறாள். கார் விற்றென்று பறக்கிறது.

குடும்பத்தில் பாலுக்குச் சீனியில்லாத துன்பம் போய், பசிக்குக் கூழுமில்லாத் துன்பம் பலப்படுகின்றது.

இளஞ்சேரன் வேலைதேட வெளியில் புறப்படுகின்றான்.

அவன் தனக்குக் கிடைப்பதாயிருந்த வட்டிக் கடை குமாஸ்தா வேலையைக் கேட்கின்றான். இல்லை அதில் மைலாப்பூர் வாஞ்சி நாதய்யர் அமர்ந்திருக்கிறார். காமராஜ நாடார் சிபாரிசில்.

சாகக் கிடக்கும் அன்னை தந்தையர்க்குச் சோறிட்டுக் காத்ததாக இருக்கட்டும் என்று அநந்த ராம் சேட்டிடம் கணக்கு வேலை கேட் கின்றான் இளஞ்சேரன். அவன் சர்க்காருக்குக் காட்ட ஒரு கணக்கும் தனியார் ஒரு கணக்கும் எழுதத் தெரியுமா என்று கேட்கின்றான். இளஞ்சேரனுக்குத் தெரியாதாகையால் வேலை கிடைக்கவில்லை.

வஞ்சிக்கொடி என்னும் நாட்டியப் பெண்ணும், இசையாசிரிய ரும் பாட்டு எழுதுவோரும் ஒரு கட்டிடத்தில் பாட்டு அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்குச் சென்ற இளஞ்சேரன் தன் தமிழ்த் திறமையாலும் பிடில் வாசிக்குந் திறமையாலும் பிடில் காரணமாக வேலையில் அமர்கிறான்.

வஞ்சிக்கொடி தனக்கொரு கொழுகொம்பாக இளஞ்சேரன் மதிக்கிறான். ஆயினும் இளஞ்சேரன் நெஞ்சில் இடைவிடாது வீற்றிருப்பவள் மங்கையர்க்கரசியே!

வஞ்சிக்கொடி இளஞ்சேரன் அழகுக்கு மனுப்போட நேர மில்லை. இளஞ்சேரனும் மங்கையர்க்கரசியை எண்ணி இவளை மறுக்காத நேரமில்லை.

நாட்டிய ஒத்திகை நடக்கிறது. வஞ்சிக் கொடியின் ஆடலில் அபாரக் கற்பனை காணப்படுகிறது.

ஒரு நாள் காலை 10 மணி வரைக்கும் இளஞ்சேரனைக் காணாததால் வஞ்சிக்கொடி அவனைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வந்து விடுகின்றாள்.

தந்தை கஞ்சியில்லாததால் உயிர்போகும் சமயம் - தாயும் பிள்ளைகளும் அடிவயிற்றைப் பிடித்தபடி அகம் நடுங்கிக் கிடக்கும் சமயம் - கடனாகக் காசு தேடி வர இளஞ்சேரன் வெளியிற் சென்றிருக்கும் சமயம் - அங்கு வந்த வஞ்சிக்கொடி நிலைமை அறிந்து - பெரியவர்க்குப் பாலும் மற்றவர்க்கு எடுப்புச் சோறும் கொண்டு வந்து இவை இளஞ்சேரன் கொடுக்கச் சொன்னவைகள் என்று அனைவர் பசியையும் தணித்துத் தெருவில் - வாசற் படியில் நின்று இளஞ்சேரன் வரவு பார்க்கின்றாள். எதிர்த்த வீட்டு எல்லம்மா அவளை அணுகி இந்த வீட்டுப் பையன் வேலையில் அமர்ந்திருப்பது மெய்தானா? என்கிறாள். வஞ்சிக்கொடி அவள் வாய் பிறப்பறிந்து அவளுக்குக் காவேரியம்மா கொடுக்க வேண்டிய கடனைத் தீர்க்கிறாள். தெருவில் கடன் கொடுத்த அனைவரும் வந்து விடுகின்றார்கள். குறட்டில் வைத்து வஞ்சிக் கொடி அனைவர்க்கும் கடன் பைசல் செய்து கொண்டிருக் கிறாள். அதே நேரம் இளஞ்சேரன் வருவதைக் கண்ட வஞ்சிக்கொடி, தன் முகத்தை முக்காடிட்டு மறைத்துக் கொள்ள இளஞ்சேரன் அனைவ ரையும் நோக்கி இங்கென்ன கும்பல் என்கிறான். அவர்களில் ஒருத்தி, கடன் கொடுக்கிறாங்க இந்தம்மா என்கிறாள். அது கேட்ட இளஞ்சேரன் நான் யாரிடமும் ஒன்றும் கொடுத்தனுப்பவில்லையே என்று தெருவில் சென்று பார்க்கும் போது வஞ்சிக்கொடி விரைந்து நடந்து மறைகிறாள். இளஞ்சேரன் இன்னார் என்றுதெரிந்து கொண்டு உள்ளே வருகின்றான்.

### தாய் கேட்கின்றாள் இளஞ்சேரனை:

ஏனப்பா ஒருவன் இரண்டு பெண்களை மணந்து கொள்ளச் சட்டம் இடந்தருகின்றதா?

**இளஞ்சேரன் :** இல்லையம்மா என் விஷயத்தில் வஞ்சிக் கொடி வைத்தது இரக்கம்!

**தாய் :** அப்பா உன்மேல் அவள் கொண்டது அன்பானால் அதை நிராகரிக்க முடியாது. நாட்டியம் பயிலும் கட்டிடத்தில் வஞ்சிக்கொடி இளஞ்சேரன் பேச்சு.

என் தாயும் ஐயப்படுகின்றார்கள். எனக்கு உதவி செய்யாதே என்கின்றான் இளஞ்சேரன்! பசிக்கு வால் குழைக்கும் பரிதாபப் பிராணியைப் பார்க்க மறுக்கலாம் இரக்கமற்ற கண்கள்! என் நெஞ்சு இரக்கம் என்ற பருவ மழையை உங்கள் குடும்பப் பயிர் மறுக்க முடியாது என்கிறாள் கண்ணீரோடு வஞ்சிக் கொடி. இளஞ்சேரன் அறியாமல் எண்ணற்ற உதவி செய்து வருகின்றாள் வஞ்சிக்கொடி அவன் குடும்பத்திற்கு!

நாட்டியக் கம்பெனி மானேஜர் சம்பள பட்டுவாடா செய்கிறார்.

வஞ்சிக்கொடிக்குச் சம்பளம் கொடுத்து, கம்பெனி பெங்க ளூருக்குச் செல்லுகிறது. நீ தாயராயிரு என்கிறார் மானேஜர். அவள் ஒன்றும் கூறாமல் சம்பளத்தை- வாங்கிக் கொண்டு எதிரிலுள்ள சோபாவில் அமர்ந்து விடுகின்றாள்.

அடுத்தபடி, இளஞ்சேரனிடமும் மானேஜர் இப்படிக் கூற, இளஞ்சேரன் நான் என் பெற்றோரை விட்டுப் பிரியலாகாது நான் வர மாட்டேன் என்கிறான். இதைக்கேட்ட வஞ்சிக்கொடியும், நானும் என் பெற்றோரைவிட்டு வர முடியாது இங்கேயேதான் இருந்தாக வேண்டும் என்றாள். அதற்கு மானேஜர் அவர் வர மறுக்கலாம். நீ மறுக்க முடியாது. அக்ரிமெண்ட் இருக்கிறதென்று கூற வஞ்சிக் கொடி நெஞ்சொடிந்து பதைக்கிறாள்.

வீடு வந்த இளஞ்சேரன் தந்த சம்பளப்பணம் அனைத்தும் பட்டிருந்த கடனுக்கே பற்றவில்லை. ஐந்து ரூபாய்க்கு அக்காளுக்கு ஆப்பிள் வாங்கி வந்ததாகவும் அதை எடுத்துக்கொண்டு அக்கா வீட்டுக்குச் சென்று ஏதாவது உதவி பெற்று வருவதாகவும் கூறுகிறான். தந்தை தடுக்கிறார்! தாய் மறுக்கிறாள்! விதவைப் பெண் வேண்டா மென்று கெஞ்சுகிறாள்! அனைவர்க்கும் சமாதானம் கூறி இளஞ்சேரன் அக்கா வீடு செல்கின்றான்.

முத்துப் பட்டணம் சுந்தரமூர்த்தி வீட்டில் ஆண் குழந்தை பிறந்ததில் "முதல் திங்கள் விழா" நடக்கிறது. பெரிய மனிதர் வந்து தாம் பூலம், செண்டு, லட்டு, ஜிலேபிப் பொட்டலம் பெற்றுப் போகிறார்கள். சுந்தரமூர்த்தியும் அன்னமும் தெரு வாசலில் நின்று வழியனுப்பு கிறார்கள். அவர்கள் இளஞ்சேரன் வருவதைக் காணுகிறார்கள். கார் டிரைவரை அழைத்து அதோ இளஞ்சேரன் வருகின்றான். அவனை இங்கே வரவிடாதே அவமானம்; கார்ஷெட்டில் இருக்கும்படி செய் என்று கூற அவனும் அப்படியே செய்கிறான். வேலைக்காரி இளஞ் சேரனுக்குச் சோறிடுகிறாள். கார்ஷெட்டில் சோறுண்ட இளஞ்சேரன் ஆப்பிள் கூடையை அக்காளிடம் கொடுக்க வேண்டும் என்று கூற வேலைக்காரி ஆப்பிளை வாங்கிக் கொண்டு, நீ ஊருக்குப் போக வேண்டும் பிறகு ஒரு சமயம் வரலாம் என்று கூற, இளஞ்சேரன் திடுக்கிட்டு அக்காவா - அப்படிச் சொன்னார்கள் என்கிறான். அக்கா வும் அத்தானும் சொன்னதைத்தான் சொன்னேன் என்று வேலைக்காரி கூற இளஞ்சேரன் ஊர் செல்கின்றான். இதை மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மங்கையர்க்கரசி ஓடிவந்து இளஞ்சேரனை வழி மறிக்க அதைக்கண்ட அன்னம் வழிமறிக்கும் மங்கையர்க்கரசியை இழுத்து வரும்படி வேலைக்காரியை அனுப்புகிறாள்.

உடன் பிறந்தே கொல்லும் வியாதி எனத் தள்ளாடி நடந்து தந்தை தாயை அடைகிறான் இளஞ்சேரன்.

இளஞ்சேரன் நடந்தவைகளைப் பெற்றோரிடம் உடன் பிறந்தோ ரிடமும் கூறுகின்றான். கஞ்சிக்கு வழியில்லையாயினும் பசி பொறுத் திருந்த அவர்கள் மானம் பொறுக்கமுடியாது வருந்தித் துடிக்கிறார்கள்.

பூங்கோதை புகலுகின்றாள். அண்ணா அடுத்த தெரு முனை யில் வீட்டுக்காரர் மகளுக்கு ஆர்மோனியம் சொல்லி வைக்க ஆள் தேடுகிறார்களாம். என்னை அழைத்து போய், அமர்த்தி முன் பணம் ஏதாகிலும் பெற்றுவரலாம் என்று கூற, இருவரும் போகிறார்கள்.

இருவரும் போனபின், ஏழுமலை முதலியார் தன் மனைவியை அழைக்கிறார். நம் தலைமுறையில் பேர் காக்க இளஞ்சேரனும் பூங்கோதையும் இவ்வுலகில் இருக்கட்டும். இந்தக் கொலையுலகை அவர்கள் சமாளித்துக் கொள்வார்கள். துன்பம் சிறிதும் இல்லாத உலகுக்கு என்னுடன் வந்துவிடு. அவ்விருவர்போக மற்றச் செல்வச்

சிறுவர்களையும் கையோடு கூட்டிச் செல்வோம் என்று கூறி அங்கொருபுறம் சென்று ஏற்கனவே சேகரித்து வைத்திருந்த நஞ்சை எடுத்து வந்து தண்ணீரில் கலந்து மக்கட்குத் தந்து மனைவிக்குத் தந்து தானும் உண்டு மாய்கின்றான். அனைவரும் மாண்டார்கள். அண்டை வீட்டுக்காரி வந்து பார்க்க அயலாரும் கூடி விடுகின்றார்கள். அடுத்த தெருவுக்குச் சென்றுள்ள இருவரையும் அழைத்து வரச் சென்ற அருணாசலப் பெரியார் அவர்கட்கு உலகின் நிலையாமை கூறி அழைத்து வருகிறார். அவர்கள் ஏன் இங்குக் கூட்டம் என்று கேட்கிறார்கள். மேலும் அருணாசலப் பெரியார் தமிழர் பெருமை கூறத் தொடங்கி தமிழர் இளிவரின் வாழாத மானமுடையார் எனக்கூறி உன்னை உன் தமக்கை அவமானப்படுத்தியதை நீ உன் பெற்றோர் களுக்குக் கூறினாய். அதனால் அவர்கள் மானமிழந்து வாழ ஒப்பாது நஞ்சுண்டு மாண்டார்கள், என்கிறார். பிணங்களைச் சூழ்ந்திருந்தவர்கள் விலகுகிறார்கள்.

பெற்றோரும் உடன்பிறந்தோரும் இறந்து கிடப்பதறிந்த இருவரும் அலறித் துடித்து அழுகிறார்கள். பிணங்கள் படம் பிடிக்கப் படுகின்றன.

இளஞ்சேரனும் பூங்கோதையும் அயலூர் செல்லுகிறார்கள். தெருவாரெல்லாம் பார்த்து இரங்குகின்றார்கள். ஒருவன் படம் பிடித்ததின் காப்பி ஒன்றை இளஞ்சேரனுக்குக் கொடுக்கிறான்.

## பொன்னகரம்

இரவு ஒரு சத்திரத்தை இருவரும் நெருங்குகிறார்கள். பொன்னகரத்து மைனர் மாணிக்கம் பூங்கோதை மேல் கண்வைத்துத் தன்னுடனிருந்த குண்டர்களுக்குச் சைகை காட்டிச் சென்று விடுகிறான். சத்திரத்தை அடைந்த இருவரும் சற்றுநேரம் சத்திரக் காவல் சபாபதிக் கிழவரிடம் பேசியிருந்து மிருதங்கம் வேணு விலாசம் தெரிந்து கொண்டு தங்கையை அங்கேவிட்டுச் சாப்பாடும் வாங்கி வந்து விடுகிறேன் என்று வெளிச் சென்றவுடன், குண்டர்கள் தந்திரமாய்ப் பேசி வெளியில் வரச்செய்து தூக்கிப்போய் விடுகிறார்கள் பூங்கோதையை!

இளஞ்சேரன் வருகிறான். அவளைக் கொண்டுபோனவன் இருப்பிடத்தைக் கிழவரால் அறிந்து அங்கு ஓடி மாணிக்கத்தைத் தூணில் கட்டிப்போட்டுத் தங்கையை மீட்டு வருகிறான். தீயவரால்

மேலும் தீமை வரும் என்று அஞ்சிக் கிழவர்தம் குடிசைக்குக் கொண்டு போகின்றார் இருவரையும்!

குடிசையில் கிழவன் மகன் முத்துவேல் அறிமுகம் ஏற்படுகின்றது.

பூங்கோதை சம்மதித்தால் பற்பொடி, பாடி விற்கும் வேலையில் அமர்த்துவதாக முத்துவேல் கூறப் பூங்கோதை சம்மதித்து வேலை ஒப்புக்கொண்டு நடத்துகிறாள்.

பெங்களூருக்கு நாட்டியக் கம்பெனியோடு சென்ற வஞ்சிக் கொடி திரும்பிவந்து பொன்னகரத்தில் தன் குடும்ப நண்பரான திருவரசனுடன் நாட்டியக் கலை மன்றம் ஏற்படுத்துகிறாள்.

ஒருபுறம் நாட்டியக் கலை மன்றத்தில் ஆட்கள் இருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த இளஞ் சேரன் அப்பக்கம் உலவுகிறான். இருவரில் அநியாய வழிச்சென்ற ஒருவனைக் கண்டிக்கிறான். அவன் எதிர்க்கிறான். இளஞ்சேரன் அடித்துத் துரத்துகிறான். துரத்தவே மற்றவன் நாட்டியக்கலை மன்றத்திற்குப் போக அஞ்சுகிறான். அவனை அழைத்துக் கொண்டு போக இளஞ்சேரனுக்கும் துரத்தப்பட்ட பார்ட்டிக்கும் போர் நடக்கிறது. திருவரசன் அங்கு வந்து செய்தியறிந்து அநியாயம் செய்தவனைக் துரத்திவிட்டு இளஞ்சேரனைக் காவற்காரனாய் அமர்த்துகிறான்.

அழகநம்பி முதலிய ஐந்துமில் ஓனர்கள் தங்களில் ஒற்றுமை ஏற்படுத்தக் கூட்டம் கூடிப் பேசுகின்றார்கள். மற்ற நால்வரின் அக்ரமப் போக்குக்கு அழகநம்பி ஒப்பாததால் மற்றவர்கள் அழகநம்பியைப் பழிவாங்க நினைக்கிறார்கள்.

இளஞ்சேரன் வழக்கப்படி குடிசைக்கெதிரில் கட்டிலில் படுத்திருக்கிறான். தூக்கம் வரவில்லை. தனியே செல்லுகிறான். கிழவர் தூங்கும்படி சொல்லுகிறார். தன்னுள் அநேக ரகசியங்களை அடக்கிக் கொண்டிருக்கும் இருட்டின் நடுவயிற்றைப் பிளக்க என்னைத் தனிமை அழைக்கிறது தாத்தா என்று கூறிச் செல்லுகிறான்.

அழகநம்பியின் கார் ஏரிக்கரையைத் தாண்டுகிறது. கார் வழி மறித்து நிறுத்தப்படுகிறது. உள்ளிருந்த அழகநம்பி தாக்கப்படுகிறான். இளஞ்சேரன் குண்டர்கள் மேல் பாய்ந்து எதிர்த்துப் போராடுகிறான்.

அடிபட்டு ஓடும் குண்டர்களில் ஒருவன் இளஞ்சேரன் மண்டையில் அடித்துவிட்டு ஓடி விடுகிறான்.

காயமுற்ற இளஞ்சேரனை அழகநம்பி காரில் ஏற்றிக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்க்கிறான்.

காலையில் ஆஸ்பத்திரியில் இளஞ்சேரனைப் பார்க்க அழகநம்பி புறப்படுகிறான். அவன் மனைவியாகிய 'மங்கையர்க்கரசி'! எங்குப் போகிறீர் என்று கேட்க இளஞ்சேரன் நிலையை அவன் தெரிவிக் கிறான். இளஞ்சேரன் என்ற பெயரைக் கேட்டதும் திடுக்கிட்ட மங்கையர்க்கரசி வெளியில் காட்டிக் கொள்ளாமல் 'நானும் வருகின்றேன்' என்று காரில் ஏறிக் கொள்ளுகிறாள். அதே நேரம் திருவரசனும் ஆஸ்பத்திரிக்குப் புறப்படுகிறான். இங்கு வேலை செய்து கொண்டிருக்கும் இளஞ்சேரன் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும், அவன் இங்கு வேலைக்கு வராதது பற்றி மன்னிக்க வேண்டு மென்றும் நண்பர் அழகநம்பி தெரிவித்தார் என்கிறான். வஞ்சிக்கொடியும் இளஞ்சேரன் என்ற பெயரைக் கேட்ட வுடன் திடுக்கிடுகிறாள். ஆயினும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் நானும் வருகிறேன் என்று காரில் ஏறிக்கொள்கிறாள்.

ஆஸ்பத்திரியில் இளஞ்சேரன் தலையில் கட்டிய கட்டோடு உறங்குகிறான். கட்டிலின் இடது புறத்தில் நிற்கும் மங்கையர்க்கரசி பழங்கனவு காணுகின்றவளாய் நெஞ்சில் இரக்கத்தோடு காத்திருக் கிறாள். வலப் புறத்தில் இரண்டு விழிகள் கலங்குகின்றன. ஓர் உள்ளம் பதைப்பு நீங்கி, இளஞ்சேரன் எப்போது விழிப்பானென்று ஏங்கியிருக் கிறது.

விழித்தெழுந்த இளஞ்சேரன் மங்கையர்க்கரசியைத் தாவிச் செல்லும் காதல் பதைப்பினால் 'என் அன்பே,' நீ எங்கு வந்தாய்; எப்போது வந்தாய்; 'ஏன் வந்தாய்', என்று கூற அவள் மங்கிய குரலால் இரண்டு சொல் சொல்லி, சற்றே ஒதுங்கி நிற்கிறாள். இளஞ்சேரன் மறுபுறம் திரும்புகிறான். அவனை வஞ்சிக்கொடி மகிழப் பேசி கண்ணீர் வடித்து, சுருக்கமாகத் தன் நிலையைக் கூறி முடிக்கிறாள். அங்கிருந்த சங்தேக உள்ளங்கள் சிறிது நேரம் பேசி இருந்து, மறுநாள் இளஞ்சேரன் அழகநம்பி வீட்டிற்குச் செல்லவேண்டுமென்று முடிவு கட்டிப் பிரிகிறார்கள்.

மறுநாள் அழகநம்பி வீட்டில் ஓர் அறையில் அழகநம்பி, மங்கையர்க்கரசி, வஞ்சிக்கொடி திருவரசன் ஆகியோர் தமக்குள் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். வெளியில் இருந்து உள்ளே வந்த இளஞ்சேரன், கூடத்தில் ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருக்கும் மங்கையர்க்கரசியை பழைய நினைவோடு நெருங்கி, நான் 'செந் தமிழே உயிரே' வாசிக்கிறேன். நீ அதைப் பாடிக்கொண்டே சற்றே ஆடு என்று கூறுகிறான். அவள் ஆடுகிறாள். இடைஇடையே இளஞ் சேரன் காதல் ததும்ப கண்ணே பொன்னே என்று நெருங்க அவள் பக்குவமாக விலகிக்கொள்கிறாள். ஆடல் உச்ச நிலையை அடைகிறது. அவள் ஆடைக்குள்ளிருந்த தாலி வெளியில் தோன்று கிறது. அவன் உற்று நோக்குகிறான். ஆத்திரம் கொள்ளுகிறான். காரணம் கேட்கிறான். நான் அழகநம்பியின் துணைவி என்று கூறுகிறாள். அவள் உள்ளே சென்று விடுகிறாள். இவன் மேற் போர்வையை முறுக்குகிறான். தூலத்தைப் பார்க்கிறான். இவன் தற்கொலை முயற்சியை கண்ட அறையில் உள்ளவர்கள் பதறு கிறார்கள். அழகநம்பி இளஞ்சேரனின் எதிரில் வந்து நின்று நண்பரே, நீர் மணக்க இருந்த மங்கையர்க் கரசியை நான் மணந்து கொண்டேன். அதன் பொருட்டு நீர் தற்கொலை செய்து கொள்ள முற்படுகிறீர். உங்கள் பொதுநலத் தொண்டை இவ்வுலகம் எதிர் பார்த்து தவம் கிடக்கிறது. நில உலகில் நீவிர் நீடுழி வாழ்ந்திருக்கவேண்டும். இதோ பாரும் நீளக்கத்தி. இதைப் பெற்றுக் கொள்வீர். பின்னடைய வேண்டாம். இரு துண்டாக என்னை வெட்டி வீழ்த்துவீர். மங்கையர்க்கரசி கைம்பெண்ணாவாள். நீவிர் மகிழ்ச்சி யோடு அவளை மறுமணம் புரிந்து நாட்டுக்கு வழி காட்டுவீர் என்று கூற, இளஞ்சேரன் சிந்தனை உலகில் சிறிது நேரம் சஞ்சரித்து, மீண்டும் எதிர் நிற்கும் அழகநம்பியை மங்கையர்க் கரசியை 'இன்று முதல் எனக்கு நீங்கள் அன்னையும் தந்தையும் ஆவீர். தீய வழியிற் சென்ற என் உள்ளத்தை நல்வழியிற் திருப்பி னீர்கள்' என்று கூறுகிறான். அறையினின்று மற்றவர்கள் வெளி வருகிறார்கள். வஞ்சிக்கொடி விழிகள் இளஞ்சேரனுக்குப் புதிய விண்ணப்பம் எழுதுகின்றன. அழக நம்பியும் திருவரசனும் வஞ்சிக் கொடியை மணந்து கொள்ளும்படி குறிப்பாகக் கூற 'மண வாழ்க்கை எனக்கு வேண்டாம்' என இளஞ்சேரன் மறுக்கிறான்.

இரவில் தனியே சென்று கொண்டிருந்த பூங்கோதையை மைனர் மாணிக்கம் பார்த்து விடுகிறான். பின் தொடருகிறான். விசில் அடித்த

படி! அவள் அச்சத்தால் நிற்காது செல்லுகிறாள். மாணிக்கம் ஓடிப் பிடிக்க முந்துகிறான். ஒரு வீட்டின் எதிரில் நிற்கும் காருக்குப் பின் பதுங்குகிறாள். மாணிக்கம் தெரிந்து நெருங்கித் தாவுகிறான். அவள் காரினுள் குதித்து அதிலிருந்த இரும்புத் தடியால் அவன் மண்டையில் அடித்து வீழ்த்தி அயலில் ஓடுகிறாள். இவை அனைத்தையும் கார் நிற்கும் வீட்டிற்கு உடையவனாகிய திருவரசு பார்த்திருந்தானாகையால் அவனும் வெளி வருகிறான். சமாளித்துக் கொண்டு எழுந்த மாணிக்கம் பூங்கோதையைப் பிடிக்க ஓடுகிறான். திருவரசனும் அனாதைப் பெண்ணைக் காப்பாற்ற ஓடுகிறான்.

விவரத்தை விசாரித்து மாணிக்கத்திற்கு புத்திமதி கூறி அனுப்பி விட்டுப் பூங்கோதையை வீட்டிற்கு அழைத்து வருகிறான். பூங்கோதை யின் வீர உள்ளத்தைக் கண்ட திருவரசன் உள்ளம் அவளை நாடுகிறது. திருவரசனின் தரும சிந்தனை பூங்கோதையின் உள்ளத்தைக் கவர்கிறது. அவள் இளஞ்சேரன் தங்கை என்பதையும் திருவரசன் அறிந்து கொள்ளுகிறான்.

மறுநாள் இரவு கிழவர் முதலியவர்களுடன் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த இளஞ்சேரன் என்னைத் தனிமை அழைக்கிறது. மறை வான இரவை ஆராய்ச்சி செய்ய என்று கூறி, தனியே செல்லுகிறான்.

பாழடைந்த கோயிலின் கோபுரத்தில் ஒரு புறாவைக் கோட்டான் அடிக்கிறது. அங்கு ஒருபுறம் ஒண்டி நின்ற இளஞ்சேரன் சிந்தனையில் ஆழ்கிறான்.

அதே நேரத்தில் மூட்டை முடிச்சுக்களுடன் சில ஆட்களும் ஒரு முகமூடியும் செல்லுகிறார்கள். கண்ணை மறைக்கும் கருக்கலைப் பிளந்து கொண்டு இளஞ்சேரன் அவர்களைத் தொடர்கிறான். அவர்கள் நீண்ட தூரம் சென்று ஒரு குகையில் நுழைகிறார்கள். இளஞ்சேரன் பதுங்கி இருந்து பார்க்கிறான்.

குகையில் கட்குடி, ஆடல், பாடல் நடை பெறுகிறது. முடிவில் அவர்களிடம் அயர்வு தலை காட்டுகிறது. இளஞ்சேரன் அங்குக் கிடந்த நீளக் கத்தியால் முகமூடியைக் கொன்று ஆட்களைக் கட்டிப் போடுகிறான்.

இளஞ்சேரன் குகையை ஆராய்கிறான். பலகோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், பாத்திரங்கள், பவுன்கள், வெள்ளி நாணயங்கள்,

நோட்டுக் கத்தைகள் காணப்படுகின்றன. 'மக்கள் சொத்து' என்று கூறுகிறது இளஞ்சேரனின் பெருமூச்சு, சாட்டையால் கட்டுண்டு கிடக்கும் ஆட்களை அடித்து விவரமனைத்தையும் கேட்டு அவர்கட்குப் புத்திமதி கூறுகிறான். அவர்கள் நீங்களே இனி எங்கட்குத் தலைவர், நீங்கள் செல்லும் பாதையிலேயே நாங்கள் செல்லுவோம்; என்றும் கூற முகமூடியின் உடையைத் தான் அணிந்து கொண்ட இளஞ் சேரன் "தொடங்குவோம் தொண்டு" என்று பாடி அனைவரோடும் அங்கேயே தங்குகின்றான்.

தொழிலாளரை ஏய்க்கும் மில் முதலாளியின் சொத்து முகமூடியால் பறிக்கப்படுகிறது!

தங்கக் கலசத்திற்கென பிளாக் மார்க்கட்டுக்கார பெரியசாமி முதலியார் கொடுத்த 500 பவுனைப் பங்கு போட்டுக் கொண்டிருந்த கோயில் பஞ்சாயத்தார், குருக்கள் ஆகியோரை முகமூடி கண்டித்துப் புத்திமதி கூறிவிட்டுப் பவுன்களையும் பறித்துச் செல்லுகிறான். பொதுமக்கள் முகமூடியின் பல தீவிரச் செயல்கள் பற்றிப் புகழ்ந்தும், இகழ்ந்தும் பயந்தும் பேசிக் கொள்கிறார்கள்.

கோவாப்ரேடிவ் பேங்க் கொள்ளையிடப்படுகிறது. போலீஸ் அதிகாரிகள் பேங்க் கட்டிடத்தில் வந்து தங்கி, பேங்கிற்கு உடையவர்களை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அனைவரும் முகமூடியின் செயல்தான் இது என்கிறார்கள். போலீஸ் காரர்கள் அவ்வாறே புனைந்து எழுதுகிறார்கள். அங்குள்ள ஒருவன் இந்த அக்கிரமச் செயல்களில் சில நாட்களாக முகமூடி தலையிடக் காணோம் என்றுகூற அவனை அனைவரும் அடித்துக் கட்டிப் போடுகிறார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் முகமூடி ஒரு காரை ஓட்டிக் கொண்டு வந்து பாங்கின் எதிரில் நிறுத்திவிட்டு இறங்கிச் செல்லுகிறான். அனைவரும் காரைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். பாங்கின் இரும்பு பெட்டி அழிவில்லாமல் இருக்கக் காணுகிறார்கள். ஐந்து மூட்டைகள் காரில் காணப்படுகின்றன. சாக்கினுள் மனிதர்கள் இருப்பதாக உணர்கிறார்கள். மூட்டைகள் பாங்கின் கூடத்தில் இறக்கி வைக்கப் படுகின்றது. உள்ளேயிருக்கும் கொள்ளைக்காரர்களைக் கட்டுவதற்குக் கயிறுகள் தயார் செய்யப்படுகின்றன. மூட்டைகளைச் சுற்றிப் போலீசுக் காரர்கள் நிற்க வைக்கப்படுகிறார்கள். ஐந்து மூட்டைகளும் அவிழ்க்கப் படுகின்றன. அவற்றின் உள்ளேயிருந்து ஐந்துபேர் கதர் குல்லாயுடனும்

கதர்ச்சால்வையுடனும் எழுந்திருக் கிறார்கள். அவர்களைக் கண்ட போலீஸ்காரர் திடுக்கிட்டுச் சலூட் அடித்து நிற்கிறார்கள். குடிசை யெதிரில் இரவு வேளையில் கயிற்றுக் கட்டிலில் இளஞ்சேரனும் முத்துவேலும் பேசுகிறார்கள்.

இலங்கையிலிருந்து ஒரு பெரும்பணக்காரர் வந்திருக்கிறார். கடை வீதியிலிருக்கும் பங்களாவை நீ காலையில் விலைபேசி வாங்கி விட வேண்டும். அதில் நிறைய மரச் சாமான்கள், சமையலுக்கு உரிய பாத்திரங்கள், பொருள்கள் எல்லாம் வாங்கிவிட வேண்டும். நீதான் அவருக்குக் கணக்கப்பிள்ளை. இந்தா இந்த ஆயிரம் ரூபாயையும் செலவுக்கு வைத்துக்கொள் என்று முத்துவேலைத் திட்டம் செய்து விட்டு இளஞ்சேரன் 'தனிமையே எனக்கு இனிமை' என்று செல்லுகின்றான்.

கடைத்தெருப் பங்களாவில் இறங்கியுள்ள மயில் வாகனம் பிள்ளையின் வள்ளல் தன்மை எங்கும் பரவுகின்றது.

மயில் வாகனம் பிள்ளை, கவிஞர்கட்கும், நூல் வெளியிடு வோருக்கும் ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு நிறுவனம் உண்டாக்குகின்றான். இவ்வாறே தொழிலாளர்க்கு ஒன்று, ஏழையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும் படி தொழிற்சாலைகள் உண்டாக்குகின்றான்.

சுந்தரமூர்த்தி தன் ஊரில் சூதாடிக் கொண்டிருக்கிறான். அங்கு அவனிடம் அவன் குழந்தை வந்து 'அம்மாவின் தாலியைக் காணோம்' என்று அழுகிறான் அதைக்கேட்ட சுந்தரமூர்த்தி, "மஞ்சளைக் கட்டிப் போட்டுக் கொள்ளச் சொல்லியனுப்பி விட்டுத் தன் கடைசி ஆட்டத்தை முடிக்கிறான். அவன் அதிலும் தோல்வி யடைகிறான். 'நான் கடைசியாக என் மனைவியின் தாலியையும் தோற்றுவிட்டேன். இனி இவ்வூரில் இரேன். மயில் வாகனம் பிள்ளை இருக்கும் ஊருக்கு போய் பிழைக்க வேண்டும்' என்று கூறி அயலூருக்கு பெண்டு பிள்ளையுடன் செல்லுகின்றான்.

மயில் வாகனம் பிள்ளை தொழிற்சாலையை மேற்பார்வை பார்க்க வருகிறார். அங்குத் தம் அக்கா, அத்தான்; குழந்தை ஆகியோரைக் கண்டு மனமிரங்கி, 'என் வீட்டு வேலைக்கு நீங்கள் வாருங்கள்' என்று அழைத்துச் சென்று தம் வீட்டில் இருக்கச் செய்து விடுகிறார்.

சுந்தரமூர்த்தியும் அன்னமும் மயில்வாகனம் பிள்ளை என்பார் இன்னார் என்று தெரிந்து கொள்ளாவிட்டாலும் சகல உரிமைகளுடன் வீட்டைப் பார்த்து வருகிறார்கள்.

நாட்டியக் கலை மன்றத்தில் நாட்டிய ஒத்திகை நடக்கிறது. வஞ்சிக்கொடி முதலிய அனைவரும் இருக்கிறார்கள். நாட்டிய மன்றத்தைப் பெரிதாக்க எண்ணி, அனைவரும் மயில்வாகனம் பிள்ளையின் உதவியை நாடுவது என்று தீர்மானிக்கிறார்கள். இளஞ்சேரன் மயில்வாகனம் பிள்ளையின் நெருங்கிய நண்பன் என்று தெரிந்து கொள்ளுகிறார்கள்.

மயில்வாகனம் பிள்ளை வீட்டில் இல்லை. முதல் நாள் காலை சுந்தரமூர்த்தி அன்னம், பிள்ளையைத் தூக்கிக் கொண்டு எங்கேயோ போய்விட்டார்கள். இப்போது வீட்டில் இளஞ்சேரனும் முத்து வேலுந் தான் இருக்கிறார்கள். ஒரு காரில் மங்கையர்க்கரசியும், வஞ்சிக் கொடியும், திருவரசனும், பூங்கோதையும் வந்து இறங்கு கிறார்கள். மங்கையர்க்கரசி இளஞ்சேரனை நோக்கி... ஓ என்று கதறி 'நான் இனி என் கணவன் முகத்தில் விழிக்க மாட்டேன். நீதான் என்னை ஆதரிக்க வேண்டும்' என்று வீழ்ந்து புரளுகின்றாள். இளஞ்சேரன் 'ஐயோ வேண்டாம். நீ போய்விடு நீ எனக்குத் தாய்' என்று தலையி லடித்துக் கொள்ளுகின்றான்.

இந்த நிலைமையைச் சாதகமாகக் கொண்டு, திருவரசன், வஞ்சிக் கொடியை இளஞ்சேரன் மணம்புரிந்து கொள்ளும்படி செய்து விடுகின்றான்.

வஞ்சிக்கொடிக்கு இளஞ்சேரன் மாலையிடப் போகின்றான். அவள் மாலையை விலக்கித் தேம்பி அழுகின்றாள். 'என்போல் ஓர் இளம் மங்கை இன்பத்துக்கிடமின்றித் துடிக்கையில் எனக்கு மட்டும் மணமா?' என்று கூறி, திருவரசன் பூங்கோதையை மணக்கும்படி செய்துவிடுகின்றாள். அதே நேரத்தில் மங்கையர்க்கரசியின் கணவனான அழகநம்பி நாடகம் வெற்றிதானா என்று கூறிக்கொண்டு உள்ளே நுழைகிறான். மங்கையர்க்கரசி அவன் தோளில் சாய்ந்து சிரித்துக்கொண்டே 'ஒட்டிக்கு இரட்டிப்பான வெற்றி' என்று கூறு கின்றாள், மங்கையர்க்கரசி மனஸ்தாபம் வெறும் நடிப்புத்தானா என்று கூறி இளஞ்சேரன் உண்மையைத் தெரிந்து கொள்ளுகின்றான்.

மாலையில் மயில்வாகனம் பிள்ளை மணவிருந்து வைக்கின்றான். அனைவரும் சென்று வாருங்கள் என்று இளஞ்சேரன் அனைவரையும் அனுப்பி வைக்கின்றான்.

விருந்தில் அனைவரும் அமர்ந்திருக்கிறார்கள். இளஞ்சேரனைக் காணவில்லை. ஆனால் அறையில் வாசற்படியில் மயில் வாகனம் பிள்ளை நிற்கிறார்.

அவர் எங்கே என்று வஞ்சிக்கொடி கேட்கிறாள். அதற்கு மயில் வாகனம் பிள்ளை, 'நீ என்னையே மணந்து கொள்' என்று கூறுகிறான். அனைவரும் ஆத்திரம் அடைகிறார்கள். மயில்வாகனம் பிள்ளை அறைக்குள் சென்று விடுகிறார். முகமூடி தோற்ற மளிக்கிறான். முகமூடி கூறுகிறான் 'நீ என்னை மணந்து கொள்' என்று.

ஆத்திரம்!

கடைசியில் மூவரும் ஒருவரே என்று தெரிந்து மகிழ்ந்து விருந்துண்ணுகிறார்கள்.

அதே நேரத்தில் மாறு வேஷத்தோடிருந்த மயில் வாகனம் பிள்ளையைப் போலீசுச் காரர்கள் விலங்கிட்டு அழைத்துச் செல்லுகிறார்கள்.

## கோர்ட்

**நீதிபதி – தீர்ப்பில்**

இளஞ்சேரனுக்குப் பாராட்டும் விடுதலையும் அளிக்கிறார். காட்டிக் கொடுத்த சுந்தரமூர்த்திக்கு, இளஞ்சேரன் ஆதரவு தருகிறான்.

■ ■ ■

---

**குறிப்பு :பாவேந்தர் பாரதிதாசனின் புதல்வியார் திருமதி வசந்தா தண்டபாணி தந்துதவிய கையேட்டுப்படி நாடகம்.**